# NAMATHU EELANADU E-PAPER-AUGUST-2020



# ?????????? ????? ???? ???????? ?????? ???????????!



யாழ்ப்பாணம், வடமராட்சிப் பகுதியில் இளைஞரொருவரைக் கடத்தி அவர் மீது வாள் வெட்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இச்சம்பவம் வடமராட்சி – வரணிப் பகுதியில் நேற்று (25) மாலை இடம்பெற்றுள்ளது.

வேலைக்குச் சென்றுவிட்டு பஸ்ஸில் வந்து, சுட்டிபுரம் பகுதியில் இறங்கிய இளைஞனை, அங்கு நின்ற இனந்தெரியாத கும்பல் ஒன்று கடத்திச் சென்று வாளால் வெட்டி படுகாயப்படுத்தி விட்டு தப்பிச்சென்றுள்ளனர்.

இதன் போது காயமடைந்த இளைஞன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

இச் சம்பவம் தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. இதனையடுத்து மேலதிக வுசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

---

# ????? ??????? ??????? ????: ????? ??????? ????????????????- ??.??.??.



விமல் வீரவன்ச கூறுவதைப் போல தமிழ் தேசியம் தோற்றுவிடவில்லை என வடக்கு மாகாண சபை அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தெரிவித்துள்ளார்.

நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலின் மூலம் தமிழ் தேசிய அரசியலை முடிவுக்குக் கொண்டு வந்துவிட்டோம் என தென்னிலங்கையில் சில அரசியல்வாதிகளால் கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன.

இதுகுறித்து இன்று (புதன்கிழமை) யாழ்ப்பாணத்தில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் கூறுகையில், “நடந்து முடிந்துள்ள பொதுத் தேர்தலில் யாழ்ப்பாண மாவட்டத்தைப் பொறுத்தவரை தமிழ் தேசியம் எந்த வகையிலும் பின்னடைவைச் சந்திக்கவில்லை. தமிழ் தேசியம் அதே நிலையில்தான் இருக்கின்றது.

தமிழ் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த மூன்று உறுப்பினர்களும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியைச் சேர்ந்த ஒரு உறுப்பினரும், தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியைச் சேர்ந்த ஒரு உறுப்பினரும் என எல்லாருமே தமிழ் தேசியத்தை சேர்ந்தவர்கள்தான் தேர்தலில் வெற்றி பெற்றிருக்கிறார்கள்.

அப்படிப் பார்த்தால் ஆட்கள் மாறி இருக்கிறார்களே தவிர கோட்பாடுகள் அல்லது தமிழ் தேசியம் மாறவில்லை. எங்களை விட்டுப் பிரிந்து செல்லவில்லை. ஏதோவொரு வகையிலே தேர்தல் காலத்தில் சில விடயங்கள் நடைபெற்றிருக்கின்றன. சில இடங்களில் மூலை முடுக்குகளில் சிலர் வாக்கு வங்கியினை சேகரித்துள்ளார்கள்.

அதை நாம் ஏற்றுக் கொள்கின்றோம். ஆனால், அதுவே எங்களுடைய அரசியலாக இருக்க முடியாது. ஆகவே நாங்கள் தொடர்ந்தும் தமிழ் தேசியம் சார்ந்து எல்லாரும் போராடுவோம். விமல் வீரவன்ச கூறுவதைப்போல எமது தமிழ் தேசியம் தோற்றுவிட்டது அல்லது தோற்கடித்து விட்டோம் எனக் கூறுவது தவறான விடயம்” என்று குறிப்பிட்டுள்ளார்.